மாணவர் சேர்க்கை, கல்வித் தரம் குறைந்துள்ள சூழலில் பாராட்டு விழா நடத்தும் திமுக அரசு

எடப்பாடி கே.பழனிசாமி குற்றச்சாட்டு

திண்டுக்கல், செப். 25: பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை குறைந்து கல்வியின் தரம் பாதிக்கப்பட்டுள்ள சூழலில், 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' என திமுக அரசு பாராட்டு விழா நடத்தி மக்களை ஏமாற்ற முயற்சிப்பதாக அதிமுக பொதுச் செயலரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி கே. பழனிசாமி குற்றஞ்சாட்டினார்.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் வியாழக்கிழமை நடைபெற்ற 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' பிரசார நிகழ்வில் அவர் பேசியதாவது:

திறமையற்ற திமுக ஆட்சியால், கடந்த நான்கரை ஆண்டுகளாக தமிழகத்தில் மக்களுக்கான திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. திமுக ஆட்சிக்கு வந்த பிறகு, பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை குறைந்துவிட்டது. அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை உள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரில் வியாழக்கிழமை நடைபெற்ற பிரசார கூட்டத்தில் பேசிய அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமி.

அரசு தொடக்கப் பள்ளிகளில் 5-ஆம் வகுப்பு மாணவரால் 3-ஆம் வகுப்புப் பாடங்களைப் படிக்க முடியாத நிலை உள்ளது. இந்தச் சூழலில், தமிழகத்தில் கல்வி வளர்ச்சி அபரிதமாக இருப்பதாகக் கூறி, முதல்வர் ஸ்டாலின் பாராட்டு விழா நடத்துகிறார். தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியைப் பாராட்டுவதற்கு தெலங்கானா முதல்வர் வரவழைக்கப்பட்டுள்ளார். விளம்பர மாடலாக செயல்பட்டு வரும் திமுக அரசு, மக்களை ஏமாற்றி வருகிறது.

52 மாத திமுக ஆட்சியில், 922 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.10.50 லட்சம் கோடிக்கு முதலீடு ஈர்க்கப்பட்டதாகவும், இதனால் 32 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இவற்றில் 75 சதவீத புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டதாக முதல்வர் ஸ்டாலின் வெளிநாடு பயணம் சென்றபோது தெரிவித்தார்.

இந்த வகையில், 25 லட்சம் பேருக்கு வேலை கிடைத்திருக்க வேண்டும். ஆனால், தமிழகத்தில் பல லட்சம் இளைஞர்கள் வேலையில்லாமல் இருக்கின்றனர். இதுகுறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான அதிமுக கோரிக்கை விடுத்தால், தமிழக தொழில்துறை அமைச்சர் வெற்றுக் காகிதத்தைக் காட்டி வெள்ளை அறிக்கை என்கிறார்.

ஆனால், தமிழக மக்களின் எண்ணத்துக்கு ஏற்பவும், எதிர்பார்ப்புக்கு ஏற்பவும் ஆட்சி நடத்தியது அதிமுக. 41 சதவீத மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் பயின்று வருகின்றனர். அரசுப் பள்ளிகளில் 3.85 லட்சம் மாணவர்கள் படித்தாலும்கூட, நீட் தேர்வில் 9 பேர் மட்டுமே தேர்ச்சி பெற்றனர். எனவே, இந்த ஏழை மாணவர்களின் கனவு நனவாக வேண்டும் என்பதற்காக 7.5 சதவீத உள் ஒதுக்கீட்டை அமல்படுத்தி, 2,818 பேர் மருத்துவம் பயில்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தது அதிமுக அரசு.

திமுக அரசுக்கு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், மக்களைப் பற்றி எந்தக் கவலையும் இல்லை. மக்கள்தான் எஜமானர்கள் என்று கருதி, அவர்களுக்கான திட்டங்களை நிறைவேற்றியதுதான் முந்தைய அதிமுக அரசின் சாதனை என்றார் எடப்பாடி பழனிசாமி.

தமிழகத்தில் கருக்கலைப்பு மாத்திரைகளை சட்டவிரோதமாக விநியோகித்த நபர்கள் மீது நடவடிக்கை

சென்னை, செப்.25: தமிழகத்தில் கருக்கலைப்பு மாத்திரைகளை சட்டவிரோதமாக விநியோகித்த நபர்கள் மீது மாநில மருந்து கட்டுப்பாட்டுத் துறை அதிகாரிகள் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். அவர்களிடமிருந்து 6,720 மாத்திரை பெட்டகங்களையும் பறிமுதல் செய்துள்ளனர்.

இதுதொடர்பாக மாநில மருந்து கட்டுப்பாட்டுத் துறை அதிகாரி குருபாரதி கூறியதாவது: பெங்களூரை பூர்விகமாகக் கொண்ட தரணிதரன் செல்வம் என்பவர் எந்த விதமான மருந்தாளுநர் உரிமமும் பெறாமல் அதிக எண்ணிக்கையில் கருக்கலைப்பு மாத்திரைகளை கொள்முதல் செய்தது தெரியவந்தது. அதனடிப்படையில் நாமக்கல் மருந்து ஆய்வாளர் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சோதனையில் பல்வேறு விஷயங்கள் வெளிச்சத்துக்கு வந்தன.

தரணிதரன் செல்வம், தமிழகத்தின் பல்வேறு இடங்களில் அந்த மாத்திரை பெட்டகங்களை விற்பனை செய்தது தெரியவந்தது. தேனியை சேர்ந்த சரவணன், சேலத்தை சேர்ந்த கார்த்திக் ராஜேஷ் மற்றும் சரவணன் ஆகியோருக்கு அதனை விற்பனை செய்தது கண்டறியப்பட்டது.

சட்டவிரோதமாக கருக்கலைப்பு செய்வதற்காக இந்த மாத்திரைகளை அவர்கள் பயன்படுத்தியதும் தெரிந்தது. அவர்களிடமிருந்து 6,720 மாத்திரை பெட்டகங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அந்த நபர்கள் குறித்து காவல்துறையிலும் புகாரளிக்கப்பட்டுள்ளது.

மருத்துவக் கண்காணிப்பு இல்லாமல் கருக்கலைப்பு மாத்திரைகளை பயன்படுத்தினால், அதீத ரத்தப் போக்கு ஏற்படுவதுடன் கரு முழுமையாக கலையாமல் உயிருக்கே ஆபத்தாக முடியும். எனவே, பொதுமக்கள் இது குறித்து உரிய விழிப்புணர்வுடன் இருத்தல் அவசியம் என்றார் அவர்.

பல்லி விழுந்த உணவைச் சாப்பிட்ட 17 மாணவர்கள் சுகவீனம்

சிதம்பரம், செப். 25: கடலூர் மாவட்டம், புவனகிரி அருகே ஆதிவராகநத்தம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் வியாழக்கிழமை பல்லி விழுந்த காலை உணவை சாப்பிட்ட 17 மாணவ, மாணவிகளுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஆதிவராகநத்தம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 108 மாணவ, மாணவிகள் ஒன்று முதல் 8-ஆம் வகுப்பு வரை படிக்கின்றனர்.

இந்தப் பள்ளியில் வழக்கம்போல வியாழக்கிழமை காலை மாணவர்களுக்கு உணவாக சேமியா கிச்சடி மற்றும் சாம்பார் வழங்கப்பட்டது.

17 மாணவர்கள் உணவு வாங்கி சாப்பிட்ட நிலையில், சாம்பாரில் பல்லி கிடந்தது தெரியவந்தது. தொடர்ந்து, மாணவர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது.

இதுகுறித்து ஆசிரியர்கள் கிருஷ்ணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில், மருத்துவர் கனிமொழி தலைமையிலான மருத்துவக் குழுவினர் பள்ளிக்கு வந்து மாணவர்களை பரிசோதித்தனர். இதனிடையே, தகவலறிந்த அங்கு வந்த பெற்றோர் ஆசிரியர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து, வட்டாரக் கல்வி அலுவலர் செல்வம் நேரில் வந்து விசாரணை நடத்தி, பெற்றோரின் வேண்டுகோளை ஏற்று, மாணவர்களை 108 அவசர ஊர்தி சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். அங்கு சிகிச்சை அளித்த பின்னர் மாணவர்கள் மீண்டும் பள்ளிக்கு அழைத்து வரப்பட்டனர்.

சிறுநீரக மோசடி வழக்கு: விசாரணை ஒத்திவைப்பு

மதுரை, செப். 25: சிறுநீரக விற்பனை மோசடி வழக்கு விசாரணையை ஒத்திவைத்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வியாழக்கிழமை உத்தரவிட்டது.

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியைச் சேர்ந்த சத்தீஸ்வரன் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

நாமக்கல் மாவட்டத்தில் நிகழ்ந்த சட்டவிரோத சிறுநீரக விற்பனை மோசடியை தீவிரமான பிரச்னையாக கருத வேண்டியுள்ளது. இதில் முகவர்கள், மருத்துவர்கள், மருத்துவமனை அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருக்கின்றனர். இந்த சிறுநீரக விற்பனையில் பெரம்பலூர், திருச்சி தனியார் மருத்துவமனைகள் ஈடுபட்டது தெரியவந்தது. இது தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என அவர் கோரினார்.

இந்த மனுவை ஏற்கெனவே விசாரித்த உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு விவரம்:

சிறுநீரக விற்பனை விவகாரம் உடல் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை விதிகளுக்கு மட்டுமன்றி, பிஎன்எஸ் விதிகளின்படியும் தவறானது. ஊரக சுகாதாரச் சேவைகளின் இயக்குநர் புகார் அளித்தால் மட்டுமே வழக்குப் பதிவு செய்ய இயலும் என அரசுத் தரப்பில் கூறுவது ஏற்கத்தக்கது அல்ல. இதனால், மாநில அரசு வழக்குப் பதிவு செய்யத் தேவையில்லை என்ற முடிவை எடுத்துள்ளது. அரசின் செயல்பாடே குற்றம் நடந்ததற்கான முகாந்திரம் உள்ளதை பதிவு செய்துள்ளது. இந்த வழக்கில் தமிழக அரசின் நடவடிக்கை அதிருப்தியை ஏற்படுத்துவதாக உள்ளது.

எனவே, தென் மண்டல காவல் துறைத் தலைவர் (ஐ.ஜி.) பிரேமானந்த் சின்ஹா தலைமையில் ஐபிஎஸ் அதிகாரிகள் நிஷா, சிலம்பரசன், கார்த்திகேயன், பி.கே. அர்விந்த் ஆகியோரைக் கொண்ட சிறப்பு விசாரணைக் குழு அமைக்கப்படுகிறது என அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதிகள் அனிதா சுமந்த், குமரப்பன் அமர்வில் வியாழக்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, மனுதாரர் தரப்பில் முன்னிலையான வழக்குரைஞர், உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழு விசாரணையில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. ஆகவே, உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவின் விசாரணை நிலுவையில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

மனுதாரர் குறிப்பிட்டதை பதிவு செய்து கொள்கிறோம். வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

PUBLIC NOTICE

This is to inform the General Public that my clients (i) P.Ponkumar and (ii) Solomon Raja Maden who are the absolute owners of the property, have lost/misplaced the Original Sale Deed dated 25.08.1982, Registered as Doc. No.3890 of 1982, S.R.O. Ambattur pertaining to the land measuring 3253 sq.ft., bearing Plot No.2 in Banu Nagar Daniel Street in old S.Nos.121/11, 121/13, as per T.S.L.R. Extract viz. old S.No. 121/11A1B, new S.No. 95/2, Block No. 20 of Oragadam Village, Ambattur Taluk, Chennai District.

Any person having any knowledge, claim or information regarding the said Sale Deed concerning the aforesaid property or any person having any claim or interest over the said property by way of mortgage, charge, agreement etc., or against the above named person or their predecessors-in-title, in relation to the property, may forward their representations to the undersigned within 15 days from the date of publication of this notice, failing which the said property will be dealt with free of any encumbrance, charge, lien, or any adverse claim or demand whatsoever.

Ms. KALAIVANI, Advocate
Plot No.288, Ground Floor,
Door No.2/A, CDN Nagar 1st Street,
Nerkundram, Chennai 600 107.

தமிழ்நாடு அரசு
நிதித் துறை, சென்னை -9

தமிழ்நாடு அரசின் 30 ஆண்டுகால பிணையப் பத்திரம் மற்றும் தமிழ்நாடு அரசின் 7.26 சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2035 மறுவெளியீடு ஏலத்தின் மூலம் விற்பனை செய்தல்

1. தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ.3000 கோடி மதிப்பில் ரூ.2000 கோடி மதிப்புள்ள 30 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரம் மற்றும் ரூ.1000 கோடி மதிப்புள்ள பிணையப் பத்திரம் 7.26 சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2035 மறுவெளியீடு ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய முன்வந்துள்ளது. இந்தப் பிணையப் பத்திரங்கள், குறைந்தபட்சம் ரூ.10,000/-க்கும் அதன் பின்னர் ரூ.10,000/-ன் மடங்குகளிலும் ஏலம் விடப்படும். இந்திய ரிசர்வ் வங்கியின் மும்பை (கோட்டை) அலுவலகம் செப்டம்பர் 30, 2025 அன்று இந்த ஏலத்தை நடத்தும்.
2. மாநில அரசின் பிணையப் பத்திரங்களை ஏலம் விடுவதற்கான பொது அறிவிக்கையின் இணைப்பு-II ன் திருத்தியமைக்கப்பட்ட போட்டியற்ற ஏலம் கேட்பு வசதி திட்டத்தின்படி (Revised Scheme for Non-Competitive Bidding Facility) விற்பனைக்காக அறிவிக்கப்பட்டுள்ள அந்த பிணையப் பத்திரங்களில், தகுதியுள்ள தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, ஒரு ஏலக் கேட்பிற்கு உச்சவரம்பாக அறிவிக்கப்பட்ட தொகையில் ஒரு சதவீதம் என்பதற்கு உட்பட்டு 10 சதவீதம் வரை ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒரு முதன்மையாளர் ஒரு ஏலக் கேட்பினை மட்டுமே வங்கி அல்லது முதன்மைத் தரகர் (Primary Dealer) மூலமாக சமர்ப்பிக்கலாம்.
3. ஆர்வமுள்ளவர்கள், ஏலக் கேட்பினை இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) மின்னணு படிவத்தில் (electronic format) செப்டம்பர் 30, 2025 அன்று கீழ்க்குறிப்பிட்டுள்ள முறையில் சமர்ப்பிக்கலாம்:
அ) போட்டி ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள் சமர்ப்பிக்கப்ப வேண்டும்.
ஆ) போட்டியற்ற ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள் சமர்ப்பிக்கப்ப வேண்டும்.
4. ஏலம் கேட்பவர் ஆண்டொன்றுக்கு எதிர்பார்க்கக் கூடிய வட்டி விகிதத்தினை இரண்டு தசம ஸ்தானத்தில் தெரிவிப்பதுடன் வேண்டும். ஒரு முதலீட்டாளர் வெவ்வேறு வட்டி விகிதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டி ஏலக் கேட்பினை மின்னணு படிவத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) சமர்ப்பிக்கலாம். இருப்பினும், ஒரு நபர் கோரும் மொத்த ஏலக் கேட்புகள் அறிவிக்கப்பட்ட தொகைக்கு மேலாக செல்லக்கூடாது.
5. ஏலத்தின் முடிவுகள் செப்டம்பர் 30, 2025 அன்று இந்திய ரிசர்வ் வங்கியின் இணையதளத்தில் வெளியிடப்படும். ஏலம் கிடைக்கப் பெற்றவர்கள், தங்களது ஏலங்களில் தெரிவிக்கப்பட்ட பிணையப் பத்திரங்களுக்கான விலையை இந்திய ரிசர்வ் வங்கி மும்பை (கோட்டை) அல்லது சென்னையில் செலுத்தத்தக்க வங்கியாணை வங்கியாளர் காசோலை (Bankers' Cheque) அல்லது கேட்போலையை (Demand Draft) அக்டோபர் 01, 2025 அன்று வங்கிப்பணி நேரம் முடிவதற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
6. தமிழ்நாடு அரசின் 30 ஆண்டுகால பிணையப் பத்திரம் ஏலத்தில் இந்திய ரிசர்வ் வங்கியால் தீர்மானிக்கப்படக் கூடிய வட்டி வீதத்தில் 6 மாதத்திற்கு ஒரு முறை ஏப்ரல் 01 மற்றும் அக்டோபர் 01 ஆகிய தேதிகளில் வழங்கப்படும் மற்றும் தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2035 மறுவெளியீடு பிணையப் பத்திரங்களுக்கு 7.26 சதவீத ஏலத்தில் இந்திய ரிசர்வ் வங்கியால் தீர்மானிக்கப்படக் கூடிய வட்டி வீதத்தில் 6 மாதத்திற்கு ஒரு முறை மார்ச் 24 மற்றும் செப்டம்பர் 24 ஆகிய தேதிகளில் வழங்கப்படும். இந்தப் பிணையப் பத்திரங்கள் அரசு பிணையப் பத்திரங்கள் சட்டம், 2006 (Government Securities Act, 2006) மற்றும் அரசு பிணையப் பத்திரங்கள் ஒழுங்குமுறை விதிகள், 2007 (Government Securities Regulations, 2007) ஆகியவற்றின்படி நிர்வகிக்கப்படும்.
7. இந்த பிணையப் பத்திரங்கள் மாற்றிக் கொடுக்கத் தக்க (Ready Forward Facility) தகுதியுடையதாகும்.
8. மற்ற விவரங்களுக்கு, தமிழ்நாடு அரசின் செப்டம்பர் 25, 2025 நாளிட்ட பிரத்யேக அறிவிக்கை எண். 846(L)/W&M-II/2025 மற்றும் எண். 847(L)/W&M-II/2025-ஐக் காண்க.

த. உதயச்சந்திரன்
அரசு முதன்மை செயலாளர்
நிதித் துறை, சென்னை- 09.

செ.ம.தொ.இ./ 1126 /வரைகலை/2025

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டட (க & ப) வட்டம் 2, சேப்பாக்கம், சென்னை-05.

குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்: 26 கட்டட (க & ப) வட்டம் 2, 2025-26, நாள்: 24.09.2025
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை: பொத்த வகை/ இனவிலை முறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அரசு சார்பாகவும் கண்காணிப்பு பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க & ப) வட்டம் 2, சேப்பாக்கம், சென்னை-05 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்வரும் பணிக்காக குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

வ. எண்.	பணியின் பெயர் மற்றும் முன்வைப்பு தொகை	பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை	காலம்	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரின் தகுதி வகுப்பு
1.	சென்னை 2, ஒய்.எம்.சி.ஏ. அரினா கூரை தொட்டி, 240 எண்ணிக்கைகள் கொண்ட கட்டமற்ற உறுப்பினர்கள் குடியிருந்து வருகிறார்கள் பராமரிப்பு பணி (அக்டோபர் 2025 முதல் மார்ச் 2026 வரை). முன்வைப்பு தொகை: ரூ. 96,800/-	ரூ. 153.60 இலட்சங்கள்	6 மாதங்கள்	வகுப்பு IV மற்றும் அதற்குமேல்

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும்.
2. பணிக்கான வகுக்க சான்றிதழுக்கான விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட செயற் பொறியாளரிடம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் 06.10.2025.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 08.10.2025 மாலை 03.00 மணி வரை
4. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 08.10.2025 மாலை 04.00 மணி

கண்காணிப்பு பொறியாளர், பொ.ப.து.,
கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம் 2,
சேப்பாக்கம், சென்னை-05.

செ.எ.தொ.இ./3160/ஒப்பந்தப்புள்ளி/2025

பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம்-9

உ.க.ந.ந.எண் 82/5676/2025 **இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

உதவி ஆணையர் (மண்டலம்-9) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மண்டலம் - 9. பகுதி - 27. வார்டு-121- கணேசபுரம் பகுதியில் பல்நோக்கு கட்டிடம் மற்றும் உடற்பயிற்சிகூடம் கட்டும் பணி

பணியின் மதிப்பு ரூ.99.77 இலட்சம்.	முன்வைப்பு தொகை ரூ.1.00.000/--

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : 13.10.2025 அன்று மாலை 3.00 மணி வரை
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : 14.10.2025 அன்று மாலை 3.30 மணியளவில்
மேலும் விவரங்களுக்கு https://tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ./ 5401/ஒப்பந்தப்புள்ளி/ 2025 உதவி ஆணையர் (ம-9)

அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்.,(ஆர்சில்)
Arcil Premier ARC
CIN : U65999MH2002PLC134884 | இணையத்தளம்: www.arcil.co.in
B.R. ஜுவல்லர்ஸ், கிருஷ்ணா ஜுவல்லர்ஸ் மற்றும் மாதாஜி ஜுவல்லர்ஸ் தொர்பான நிதி சொத்துக்களின் தொர்பாக அமைக்கப்பட்ட ARCIL-Arcil-SBPS 073-I டிரஸ்ட்-டிரஸ்ட்டின் டிரஸ்ட்டி எனும் முறையில்.
ஆர்சில் அலுவலகம்: தி ரூபி, 10ஆவது தளம், 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை-400028.

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI சட்டம்) அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதிகள் 6, 8, 9 ஆகியவற்றின் மின்-ஏல இணைய வழிப் பொது விற்பனை அறிவிப்பு

மின்-ஏல இணைய வழி விற்பனைக்கான பொது அறிவிப்பு-கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (சர்ஃபாசி சட்டம்) அதனுடன் கடனீட்டுச் சொத்துமீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதிகள் 6, 8, 9 ஆகியவற்றின் கீழானது இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், (23.12.2022 நாளிடப்பட்டு பதிவு செய்யப்பட்ட பணி ஒப்படைவு ஒப்பந்தம் மூலம் DBS வங்கியின் நிதிச்சொத்துகள் ARCIL-க்கு பணி ஒப்படைவு செய்யப்பட்டதற்கிணங்க) ARCIL-Arcil-SBPS 073-I டிரஸ்ட்-டிரஸ்ட்டின் டிரஸ்ட்டி எனும் முறையில் செயல்படும் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட் ("ARCIL") க்கு அடமானம் செய்யப்பட்டு / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்து/க்கள், இதன் கீழ்க்கண்ட விபரங்களின் படியிலான நிலுவைத்தொகைகள் மற்றும் மேல் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் உள்ளிட்ட தொகையை வசூலிப்பதற்காக, கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதானஉரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதன் தொடர்புள்ள கடனீட்டுச் சொத்துமீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 6, 8 & 9 ன் கீழான ஷரத்துகளின் படி, "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" "இருக்கின்றவற்றுடன்" மற்றும் "திரும்ப பெறத்தகாத வகையில்" என்ற அடிப்படையில் இணையவழி மின் - ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

கடன்தாரர் பெயர்	1. B.R. ஜுவல்லர்ஸ், கிருஷ்ணா ஜுவல்லர்ஸ் மற்றும் மாதாஜி ஜுவல்லர்ஸ்
கூட்டு கடன்தாரர்/கள் / ஜாமீன்தாரர்/கள் / அடமானதாரர்(கள்) பெயர்	1. திரு. நேமிசந்த் சீர்வாய், 2. திரு. முன்னாராம், 3. L. பியாராம்
25-04-2018 நாளிடப்பட்ட சர்ஃபாசி அறிவிப்பின்படி மொத்த நிலுவைத்தொகை	மார்ச் 31, 2018 அன்றுள்ளபடி ரூ. 61,65,971.49/- (இந்திய ரூபாய் அறுபத்தொரு லட்சத்து அறுபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தொன்று மற்றும் நாற்பத்தொன்பது பைசா மட்டும்) இதனுடன் சேர்த்து ஏப்ரல் 01, 2018 முதல் பணம் செலுத்தும் வரை ஒப்பந்த/ ஆவணப்படுத்தப்பட்ட விகிதங்களில் மேல் வட்டி மற்றும் பிற நிகழ் செலவுகள் சகிதம்
சுவாதீனம்	ஆர்சில் செப்டம்பர் 03, 2025 அன்று சர்ஃபாசி சட்டம், 2002 இன் விதிகளின்படி நேரடி சுவாதீனம் எடுத்துக்கொண்டது,
ஆய்வு நாள்	கோரிக்கையின் பேரில் ஏற்பாடு செய்யப்படும்
டேவணித் தொகை (EMD)	ரூ.14,10,000/- (இந்திய ரூபாய் பதினான்கு லட்சத்து பத்தாயிரம் மட்டும்). டேவணித் தொகையை "Asset Reconstruction Company (India) Ltd" என்ற பெயரில் RTGS மூலம் டெபாசிட் செய்ய வேண்டும். நடப்புக் கணக்கு: 02912320000561, HDFC வங்கி லிமிடெட், கிளை: லோயர் பரேல், மும்பை, IFSC குறியீடு: HDFC0000291
ஏலப்புள்ளி & EMD சமர்ப்பிக்க கடைசி நாள்	29.10.2025 மாலை 5:00 மணிக்கு முன்
குறைந்தபட்ச கேட்பு விலை	ரூ.1,41,00,000/- (இந்திய ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தொரு லட்சம் மட்டும்)
ஏல உயர்வுத்தொகை	ரூ.30,000/- (இந்திய ரூபாய் முப்பதாயிரம் மட்டும்)
மின்-ஏல தேதி & நேரம்	30.10.2025 மதியம் 02.30 மணிக்கு
ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கான இணைப்பு	www.arcil.co.in
ARCILக்குத் தெரிந்த நிலுவை வழக்குகள்:	அதிகாரப்பூர்வ அலுவலரின் உச்சபட்ச அறிவு மற்றும் தகவலுக்கு எட்டியவரை, சொத்து மீது எந்த வழக்குகளும் நிலுவையில் இல்லை
ARCILக்குத் தெரிந்த நிலுவைகள்/ வில்லங்கங்கள்	அதிகாரப்பூர்வ அலுவலரின் உச்சபட்ச அறிவு மற்றும் தகவலுக்கு எட்டியவரை, சொத்து மீது எந்த வில்லங்கங்களும் இல்லை
ஏலம் விடப்படவுள்ள கடனீட்டு சொத்து விபரம்	அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட சொத்து: காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், செம்பரம்பாக்கம் ஊராட்சி, பழஞ்சூர் மதுரா பாப்பஞ்சத்திரத்தில் பழைய சர்வே எண். 380 இல் அமைந்துள்ள கட்டடத்துடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட காலி நிலம் மொத்தம் 4860 சதுர அடி பரப்பளவு எல்லைகள்: வடக்கு - திரு. வெங்கடேசனுக்குச் சொந்தமான நிலம், தெற்கு: திரு. மணியால் வாங்கப்பட்ட நிலம் கிழக்கு - பொதுச் சாலை, மேற்கு - பொதுச் சாலை

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

1. ஏல விற்பனையை SARFAESI சட்டத்தின் விதிகளின் கீழ் உதவியுடன் மற்றும் மின்னணு ஏலம் மூலமாகவும் அதன் உதவியுடனும் அதிகாரப்பூர்வ அலுவலரால் நடத்தப்படுகிறது. ஏலம்/ விலைகோரல் www.arcil.co.in என்ற வலைத்தளம் மூலம் "இணையவழி மின்னணு முறையில்" மட்டுமே நடத்தப்படும். மின் ஏலத்துக்கான தளத்தை ஏற்பாடு செய்வதற்கான சேவை வழங்குநர் ஆர்சில் ஆகும்.
2. ஏல ஆவணத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையின்படி ஏலம் நடத்தப்படுகிறது. ஏலதாரர்கள் ஏல ஆவணங்கள், ஏலம் விடப்படவுள்ள கடனீட்டு சொத்தின் விவரங்கள்/ஏலப் படவங்களைப் பெறுவதற்கு ARCIL இன் வலைத்தளம், www.arcil.co.in மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இணையப் மற்றும் சேவை வழங்குநரான ARCIL இன் வலைத்தளத்தைப் பார்வையிடலாம்.
3. ஏலதாரர்கள் தங்கள் சொந்த அலுவலகங்கள்/தங்கள் விருப்பப்படியாப இடத்திலிருந்து விலைகோரி/ ஏலம்கேட்டு மின் ஏலத்தில் பங்கேற்கலாம். இணைய இணைப்பை ஒவ்வொ